# திருக்குறளில் புலனாகும் பொருளியல் கூறுகள்

***முனைவர் வ. ரில்பர்ட் ஜெனார்த்தனன்***
உதவிப் பேராசிரியர்
தூய சவேரியார் கல்லூரி(தன்னாட்சி) பாளையங்கோட்டை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6460

## *முன்னுரை*

தமிழ் இலக்கியத்தின் மணி முடியாக பிரகாசிப்பது வள்ளுவர் படைத்த திருக்குறள். தமிழ் இலக்கியப் பெட்டகத்தில் நீதி நூல்களுக்கென்று ஒரு தனி இடம் உண்டு தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும் சமயச் சார்பற்ற தன்மையையும், மனித நலக்கோட்பாட்டு நெறிகளையும் தொன்று தொட்டு தமிழ் நீதி நூல்கள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன.

மேலைநாட்டு அறிஞர்களின் கருத்தினை நூல்கள் அனைத்திலும் படிப்போரை இன்புறுத்தும் இயல்பைக் காட்டும் அறிவுறுத்தும் இயல்பே மேலோங்க நறிகின்றது. ஆனாலும் விழுமிய கருத்துக்களும் சொல் நயமும் பொருட்பொலிவும் எடுத்துரைக்கும் நிலையும் திருக்குறளைத் தன்னிகரற்றுத் திகழச் செய்கின்றன. அவ்வகையில் திருக்குறள் உணர்த்தும் பொருளியல் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருக்குறள் விளக்கம்

தமிழ் நூல்களுள் தலையாய நூல், மிகச் சிறந்த நூல், பார் போற்றும் நூல் திருக்குறள். இந்நூல் மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் சிறப்பான நூல் இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இஃது அடிப்படையில் ஒரு சிறப்பான வாழ்வியல் நூல் மாந்தர்கள் தம் அக வாழ்விலும் சமுகமாகக் கூடி வாழவும், புற வாழ்விலும் இன்பமுடனும் இசைவுடனும் நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது.

## பொருளியல்

“பொருளியல் என்பது பற்றாக் குறையான வளங்களோடு மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியல்” ஆகும். பொருளியல் என்பது மாற்றுப் பயன்பாடு உள்ள, கிடைத்தற்கு அருமையான வளங்களைக் கொண்டு, மாந்தர்கள் தமது எண்ணிலடங்காத தேவையான நிறைவு செய்யும் நடப்புகளை ஆராயும் அறிவியலாகும்.

மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளைக் கூறுவது பொருளியல் நுஉழமெஅஉைஉ என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாக இன்று பொருளியல் என்னும் சொல்லே ஆட்சி பெற்று வருகிறது. மக்கள் பண்பாடு, நாகரிகம் அனைத்தும் இப்பொருளியலின் அடிப்படையிலேயே அமைகின்றன. பொருளியல் பணிகளின் தொடக்கமே மனிதனின் தேவைகள் தான், மனிதனுக்குப் பல்வேறுபட்ட தேவைகள் உண்டு. இவை எல்லாவற்றையும் அறிவதற்கும், ஆராய்வதற்கும் பொருளியல் என்னும் ஒரு துறை அறிவு தோன்றியது.

## அறவழியில் பொளீட்டுதல்

அறவழியில் சென்று பொருள் ஈட்டினால் உண்மையான மனநிறைவும் மகிழ்ச்சியும் கிடைக்கும். அதைவிடுத்து குறுக்கு வழியில் பொருளிட்டி வாழ்கின்ற வாழ்க்கையில் இன்பம் நிலைக்காது. மனித இனம் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று பொருள் ஈட்டுதல். பொருள் இல்லாமல் எந்த நன்மையும் அடைதல் இயலாது. தீய வழியில் பொருள் ஈட்டாமல் முறையாகத் திறனறிந்து பொருள் ஈட்டுதலே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது என்பதை வள்ளுவர்,

**"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்"*(குறள்.754)***

என்கிறார் பொருளை அறவழியில் ஈட்ட வேண்டும். பொருளைப் பொருளுக்காகவே மட்டும் பெறுதல் கூடாது. நேர்வழியல் பொருள் ஈட்ட வேண்டும் என வள்ளும் உலக மக்களை அழைக்கின்றது.

இவ்வுலகச் சமுதாயம் பொருள் இல்லாதவரை ஒரு போதும் மதிப்பில்லை ஆதலால் பொருள் நிறைய சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை,

**"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்"*(குறள்.755)***

என்று ஊட்டுகிறார், நேர்மையான வழிகள் அன்றி தீய வழியில் செல்வம் சேர்த்தால், அச்செல்வம் தீராத துன்பத்தைத் தருவதாகும் அவ்வாறன்றி அவ்வழியில் பொருள் சேர்த்தவனை அவன் நல்லவனா?, தீயவனா?, என அவனது மக்கள் அடையாளம் காட்டுவர், இதனை வள்ளுவர்,

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்"*(குறள்.114)***

என்கிறார். சமுதாய முன்னேற்றத்திற்கு நாட்டின் வளர்ச்சிக்கும் அவசியத் தேவை பொருளாதார வளர்ச்சியாகும். ஆதலால் பொருளைத் திறனறிந்து அறவழியில் ஈட்டுதல் வேண்டும் என்ற பொருளியல் கொள்கை பதிவு செய்யப்படுகிறது.

## பொருளின் சிறப்பு

ஒருவன் தன் வாழ்வில் சேர்த்த பொருளை ஏழை, எளியோருக்குத், தன் செலவுகளுக்கு, தன் எதிர் காலத்திற்கு என்று பகுத்துக் கொண்டு வாழ வேண்டும்.

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளில்லார்க்கு இவ்வுலம் இல்லாகி**
**யாங்கு" *(குறள்.247)***

அருளில்லாதவர்க்கு மேல் உலகில் மட்டும் தான் இடம் இல்லை. ஆனால் பொருளிளல்லா தவர்களுக்குத் தான் வாழ்கின்ற உலகில் இடமில்லை என்று குறிப்பிடுகிறார். முதலில் வரும் பொருளைப் பற்றிய எண்ணமே அனைவர் மனத்திலும் முற்றி பொருளைப் பற்றிய எண்ணமே அனைவர் மனத்திலும் முற்றி நிற்கின்றது. பொருளின்றி இவ்வுலகில் வாழ்தல் அரிது என்பதை உண்மை என அனைவரும் அறிந்துள்ளனர். இதனை அறிந்த இளைய சமுதாயத்தினர் அறிவுச் செல்வம் பெற்றதும் வெளி நாட்டுக்குச் சென்று பொருட் செல்வத்தை ஈட்டி வருகின்றனர்.

பொருள் இருந்தால் தான் இவ்வுலக இன்பத்தைப் பெறமுடியும். ஆகவே இவ்வுலக இன்பத்தைப் பொருள் இல்லாமல் பெறுவது சாத்தியமில்லை. வாழ்க்கைக்குப் பொருள்

மிக மிகத் தேவை. பொருளின்றி தருமமும் செய்ய இயலாது. பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கு மகிழ்தலும் சாத்தியமில்லை.

அதைப் போலவே அருள் உள்ளம் இல்லாதவர்க்கு மறு உலகில் இன்பம் இல்லை. பொருள் இவ்வுலக இன்பத்துக்குக் காரணமாக அமைவதைப் போல அருள் மறு உலக இன்பத்திற்குக் காரணமாக அமைகிறது. பொருள் மூலம் தர்ம காரியம் செய்யும் போது சுரக்கும் அருள், அவ்வுலகப் பேறு கிடைக்கவும் காரணமாகிறது. பொருளால் இவ்வுலக இன்பத்தையும், அருளால் மறு உலக இன்பத்தையும் அடையலாம்.

### செல்வத்தின் பெருமை

பொருளின் பெருமைகளைப் பற்றிப் "பொருள் செயல்வகை" என்னும் அதிகாரத்தில் உள்ள குறள்கள் எடுத்தியம்புகின்றன.

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லது இல்லை பொருள்"**
***(குறள்.751)***

இக்குறளில் ஒரு பொருட்டாக மதிக்கப் படாதவனையும் மதிக்கும் படி செய்வது செல்வமாகும்.

அதைத்தவிர வேறு எதுவும் சாதாரண மனிதனுக்குப் பெருமையைப் பெற்றுத் தராது. ஆகவே ஒருவன் கண்ணோடும் கருத்தோடும் அதைச் சேர்க்க கற்றுக் கொள்ள வேண்டும்

**"பொருளென்னும் பொய்யா விளக்கும் இருளறுக்கும்**
**எண்ணிய தேய்துச் சென்று"**
***(குறள்.753)***

பொருள் என்று சொல்லப்படுகின்ற அணையாத விளக்கு தன்னை சேமித்து வைத்தவர், நினைத்த இடத்திற்குச் சென்று அங்குள்ள இருளைப் போக்கும்.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால்**
**தன்கைத் தொன்று உண்டாகச் செய்வான் வினை"**
***(குறள்.758)***

ஒருவன் தன் கையில் உள்ள பொருளை வைத்துக் கொண்டு ஒரு செயலைச் செய்வது என்பது மலையின் மேல் ஏறி நின்று யானைப் போரைப் பார்த்தல் போன்றதாகும்.

**"செய்க பொருளைச் செருநர் செருக்கறுக்கும்**
**எஃதனிற் கூரியது இல்"(குறள்.759)**

ஒருவன் பொருளைத் தேடிச் சேர்க்க வேண்டும். அதுதான் பகைவனின் செருக்கை அழிக்க கூடிய ஆயுதம். அதைவிடக் கூர்மையான ஆயுதம் வேறொன்றுமில்லை.

வள்ளுவர் தம் குறள்களில் எண்ணற்ற பொருளாதாரச் செய்திகளைச் சிந்தனைகளாக வடித்துத் தந்துள்ளார். பொருள் உள்ளவர்கள் சமுதாயத்தில் வலிமை உள்ளவர்களாக வாழ்கின்றார்கள். பொருளற்றவர்கள் சமுதாயத்தில் ஏதோ ஓர் மூலையில் ஒதுக்கப் பட்டு பின் அடையாளமிழக்கிறார்கள் ஒவ்வொரு மனிதனையும் வலுப்படுத்தி, வளப்படுத்தி மனதில் வலுவுள்ள நம்பிக்கை கொள்ள வைப்பது செல்வம் என்பது புலனாகிறது.

### பொருள் பங்கீட்டுச் கொள்கை

தனக்குக் கிடைத்ததைப் பங்கிட்டு, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் தர்ம சாஸ்திரங்கள் கூறும் எல்லா தருமங்களிலும் சிறந்தது ஆகும் என்பதை,

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாத் தலை"**
***(குறள்.322)***

இதில் சமூக அமைதிக்கான மிகப்பெரிய தத்துவத்தை வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். தனக்குக் கிடக்காத உணவைத் தனக்கென்று மட்டும் பதுக்கி வைத்துக் கொள்ளக் கூடாது. தனக்குக் கிடைத்த உணவை ஏனைய உயிர்களும் உயிர்வாழும் வகையில் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

தர்மங்களில் எல்லாம் தலை சிறந்த தர்மம் பசிப்பிணி தீர்த்தலே ஆகும். பசி வரும் போது ஏனைய தர்மங்கள் அழிந்து போகின்றன. ஆகவே தனக்குக் கிடைத்த

உணவை எவன் ஒருவன் ஏனைய உயிர்களுக்கும் பகிர்ந்து அளித்து பசிபோக்கு கிறானோ, அவன் தர்மத்தைச் செய்கிறவன் மட்டுமல்ல தர்மத்தைக் காக்கிறவனும் ஆவான். எனவே உணவைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து தானும் உண்ணுதலே சிறந்த தர்மமாகும்.

**"பயன்மரம் உள்ர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்"**

**(குறள்.216)**

இக்குறளில் பயன்தரக்கூடிய சிறந்த மரம் யாவருக்கும் பயனளிக்கும் வகையல் ஊரின் நடுவிலே அமைய வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. உதவி செய்கின்ற மனப்பான்மை உடையவனிடத்தில் செல்வம் இருந்தால் அந்தச் செல்வம் தேவைப்படுகின்ற அனைவருக்கும் பயன்படும். நம் தேடிய செல்வதைப் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும். அவ்வாறு கொடுத்து மகிழும் இன்பமே பேரின்பமாகும்.

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

**(குறள்.212)**

என்கிறது வள்ளுவம். நாம் சேர்ந்து வைத்த பொருள் யாவும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் சமுதாயத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் இருக்க வேண்டும். ஆதலால் காத்த பொருள் கைவிட்டுப் போகாமல் இருக்க அதனைத் தகுந்தவர்களுக்குக் கொடுத்து இன்புற வேண்டும்.

**அளவறிந்து வாழும் வாழ்க்கை**

ஒருவன் தன் வாழ்க்கையில் இன்பம் அடைவதற்கு முறையாக பொருள் தேட வேண்டும். அவ்வாறு தேடிய பொருளைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சிக்கனம் இழந்த குடும்பம் பொருளாதாரத் தில் நலிவடையும். இதனை வள்ளுவர்,

**"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி"(குறள்.477)**

ஆற்றில் இட்டாலும் அளவோடு இட வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப தன்னிடம் உள்ள பொருளை அறிந்து அதற்கேற்பக் கொடுக்க வேண்டும். அதுவே பொருளைப் போற்றி வழங்கும் நெறியாகும்.

**"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்"**

**(குறள்.479)**

ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள செல்வத்தின் தன்மை அறிந்து அதற்குத் தகுந்தபடி வாழ வேண்டும். அவ்வாறு வாழாதவனுடைய வாழ்க்கை செழிப்புடையது போன்று தோன்றி காணப்பட்டு விரைவில் அழிந்து போகும்.

**முடிவாக**

ஒரு நாடு முன்னேற்றம் அடைய அந்நாட்டில் முதலில் பொருளாதாரம் ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் திட்டங்களை இதன் அடிப்படையில் படிப்படியாக அமைத்தால் அந்நாட்டின் முன்னேற்றம் மிக விரைவில் எளிதாக ஏற்பட்டு விடும். அதற்கு இந்நிலைவுலகில் வாழும் ஒவ்வொருவரும் செல்வத்தை சேமிக்க வேண்டும், சேமித்து பொருளைப் பிறருக்குப் பகிர்ந்திட்டு தானும் பிறரும் மகிழ்வாக வாழ வேண்டும்.